(2)

# BSNL அதிகாரிகள் & ஊழியர்கள் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு
# JAC – சென்னை தொலைபேசி

| A. சண்முக சுந்தரராஜன் (CS.SNEA)<br>தலைவர், JAC | K. கோவிந்தராஜ் (CS.BSNLEU)<br>கன்வீனர், JAC |
|---|---|

தேதி: 01.11.2011

## நவம்பர் 15 வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

தோழர்களே!

அக்டோபர் 31 அன்று டெல்லியில் கூடிய அகில இந்திய JAC கூட்டத்தில் விவாதித்து கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. நவம்பர் 15 வேலை நிறுத்தம் நடத்துவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது JAC தலைவர்களின் கருத்து பரிமாற்றத்திற்குப்பின், ஒற்றுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதமாக நவ.15 வேலை நிறுத்தத்தை ஒத்தி வைப்பது.
2. குளிர்கால பாராளுமன்ற கூட்டம் நடைபெறுவதையொட்டி, அனைத்து சங்கங்களும் பங்கேற்கும் வண்ணம் தேதியை நிர்ணயித்து, டிசம்பர் மாதம் ஒரு நாள் வேலை நிறுத்தத்தை நடத்துவது.
3. நிறுவனத்தையும், ஊழியர்களையும் பாதுகாக்க நடத்தப்படும் இந்த இயக்கங்கள் எழுச்சிகரமான முறையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, அனைவரும் தயாரிப்பு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

சங்க வேறுபாடுகளை மறந்து சங்கமிப்போம்!

டிசம்பர் வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்.

தோழமையுடன்

K. கோவிந்தராஜ்
கன்வீனர், கூட்டு நடவடிக்கைக்
குழு (JAC), சென்னை தொலைபேசி